பக்கங்கள் 20+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | சித்திரை 08 திங்கட்கிழமை 21.04.2025 | அதிர்வு 261


## போப் பிரான்சிஸ் இன்று காலமானார்



20


'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்


# சஹ்ரானுக்கும் இராணுவ உளவுப் பிரிவினருக்கும் இடையிலான தொடர்பு குறித்து விசாரணை செய்க!

### பேராயர் மல்கம் ரஞ்சித் வலியுறுத்து



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தை மேற்கொண்ட பயங்கரவாதக் குழுவின் தலைவர் எனக் கருதப்படும் சஹ்ரானுக்கும், இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பேராயர் மல்கம் ரஞ்சித் கோரிக்கை விடுத்தார்.

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று நடைபெற்ற ஆராதனை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், ஜனாதிபதியிடம் ஏழு கோரிக்கைகளை முன்வைத்தார்.

04

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: பிரதான சூத்திரதாரி யார்?

### அநுரவிடம் சஜித் கேள்வி






"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி யார் என்பது தொடர்பிலான தகவல்களை நேற்று விசேட அறிவிப்பின் மூலம் வெளிக்கொணர்வதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்திருந்தார்.

03



## மோ. சைக்கிள் விபத்தில் கணவன், மனைவி சாவு!

(க.மகாதேவன்)

தம்புள்ளை – குருநாகல் வீதியில் பெலிகமுவ பகுதியில் இன்று காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் தெஹியத்தகண்டிய பகுதியைச் சேர்ந்த 30 மற்றும்,28 வயதுடைய கணவன், மனைவி என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

03



## பஸ் - லொறி விபத்தில் இராணுவச் சிப்பாய்கள் உட்பட 22 பேர் படுகாயம்

நிட்டம்புவை – கிரிந்திவெல வீதியில் இடம்பெற்ற விபத்தில் இராணுவச் சிப்பாய்கள் உட்பட 22 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று கிரிந்திவெல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

03

# 20 தேர்தல் வழக்குகள் நீதிமன்றம் நிராகரிப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 20 எழுத்தாணை மனுக்களைப் பரிசீலனை எடுக்காமல் மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று நிராகரித்து தீர்ப்பு வழங்கியது.

தேர்தலுக்கு நாள்கள் கிட்டிய காரணத்தினாலும் காலம் தாமதித்து விட்ட நிலையிலும் இந்த மனுக்கள் நிராகரிக்கப்பட்டன எனக் கூறப்பட்டது.



03




### கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில்

# ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் ஆராதனை

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் இன்று திங்கட்கிழமை இரங்கல் ஆராதனை முன்னெடுக்கப்பட்டது.

இந்த இரங்கல் ஆராதனையில் கொழும்பு மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது.

ஏப்ரல் 21 பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டு இன்றுடன் 6 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு நாடு முழுவதும் உள்ள தேவாலயங்களில் இரங்கல் ஆராதனைகள் நடைபெற்றன.

கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் உட்பட நாட்டின் 8 இடங்களில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களில் 250 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தனர்.

இந்தப் பயங்கரவாதத் தாக்குதல் இடம்பெற்று இன்றுடன் 6 வருடங்கள் நிறைவடைகின்ற நிலையில், தாக்குதலுக்குக் காரணமானவர்கள் இதுவரை சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை என்பதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீதி கிடைக்கவில்லை.

இந்நிலையில், ஏப்ரல் 21 தாக்குதலின் 6ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் இரங்கல் ஆராதனை மற்றும் நடை பவனி முன்னெடுக்கப்பட்டன.



அத்துடன் இன்று காலை 8.45 மணியளவில் நாடளாவிய ரீதியாக உள்ள சகல வழிபாட்டுத் ஸ்தலங்களிலும் மணி ஓசை எழுப்பப்பட்டு, 2 நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதேவேளை, இன்று கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, திருத்தந்தையின் திருப்பீடமான வத்திக்கானில் இயங்கும் இறைமக்களை தூயவர்களாக வழிகாட்டும் திருத்துறை நம்பிக்கையின் சாட்சிகள் அடங்கிய நூலில் பெயர்களை பதிவு செய்யும் அதிகாரபூர்வ அறிவிப்புக்கான பிரகடனத்தை வாசித்தபோது, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் உயிரிழந்த 167 கத்தோலிக்க விசுவாசிகளின் பெயர்கள் விசுவாசிகளின் சாட்சிகள் என்ற அதிகாரபூர்வ நூலில் அவர்கள் விசுவாசம் மீது வைத்த தளம்பாத சாட்சியாக இணைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.
















## உயிர்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், நேற்று உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்புடைய ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை மாத்திரம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசனம் வெளியிட்டார்.

திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் இன்று திங்கட்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

"அன்று உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சாக்குப்போக்குகளைக் கூறிய இந்த அரசு, இன்றும் அதனையே செய்து மக்களை ஏமாற்றி வருகின்றது.

அரசியல் களத்தில் முதலாளித்துவம், சோசலிசம், கம்யூனிசம், சமூக ஜன நாயகம் என பல்வேறு கோட்பாடுகள் காணப்படுகின்றன. இவற்றில் சமீபத்தில் இணைந்ததோர் கோட்பாடுதான் பொய்யும் பாசாங்குத்தனமுமாகும்.

ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் பொய்யான கோரிக்கைகளை முன்வைத்த மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான திசைகாட்டி அரசு, தற்போது புதிய கூற்றுக்களை முன்வைத்து, முட்டாள்தனமாகப் பிரஸ்தாபிக்கும் அரசாக மாறியுள்ளது.

நாட்டு மக்களை ஏமாற்றும் அரசு இன்று செய்வதறியா அரசியலை முன்னெடுத்து வருகின்றது.

33 சதவீதத்தால் மின் கட்டணத்தைக் குறைப்போம் என வாக்குறுதி வழங்கியிருந்தனர். ஆனால், ஆட்சிக்கு வந்த பின்னர் இன்னும் 6 மாதங்களுக்கு மின் கட்டணத்தை குறைக்க முடியாது என்றனர்.

இதனால் பொதுமக்கள் கொந்தளித்து பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவை நாடிய போது பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு 20 சதவீதத்தால் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்தது.

இந்த மின்சாரக் கட்டணக் குறைப்பை அரசோ ஜனாதிபதியோ எடுக்கவில்லை. எஞ்சியுள்ள 13 சதவீதக் குறைப்பை இந்த அரசு விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இந்தப் பொய், களவு, ஏமாற்றுதல் போன்றவற்றால் தொடர்ந்தும் நாம் ஏமாறுவதா, இல்லையா என்பதை இந்த நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும். ஆளுந்தரப்பினர் பழைய பொய்களோடு புதிய பொய்களையும் முன்வைத்து வருகின்றனர். வரவு – செலவுத் திட்டத்தில் கூட இல்லாத சலுகைகளை வழங்குவதாக பொய்யுரைக்கின்றனர்.

திசைகாட்டி அதிகாரங்களை கைப்பற்றாத உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட மாட்டாது என ஜனாதிபதி தேர்தல் சட்டங்களை மீறி பகிரங்கமாக கூறி வருகின்றார்.

உள்ளூராட்சி சட்டங்கள் குறித்து போதிய விளக்கம் ஜனாதிபதிக்கு இல்லை. அதனாலேயே இவ்வாறான கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றார். உள்ளூராட்சி மன்ற சட்டம் மிகவும் வலுவான சட்டமாகும். இதனை ஜனாதிபதி சரியாக வாசிக்காமல் முட்டாள்தனமாகப் பேசி வருகின்றார்.

கடனைச் செலுத்தினால் மட்டுமே வங்குரோத்து நிலையிலிருந்து எம்மால் தப்பிக்க முடியும். கடனை அடைக்க முடியாவிட்டால், மீண்டும் நாம் வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்படுவோம்.

2028 ஆம் ஆண்டு முதல், நமது நாடு தனது நிலுவையில் உள்ள வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டும். இதற்கு அந்நியச் செலாவணி தேவை. இதற்குப் பொருளாதார வளர்ச்சியும், அரச வருவாயில் அதிகரிப்பும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதற்கு 2025 முதல் 2028 வரை 5 சதவீதத்துக்கும் அதிகமான பொருளாதார வளர்ச்சி விகிதத்தைப் பேணிக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. அவ்வாறு இல்லையென்றால் கடனைச் செலுத்த முடியாமல் மீண்டும் வரிசை யுகத்துக்குச் செல்ல நேரிடும்.

எனவே, பொருளாதாரத்தை மேம்படுத்தி விரிவுபடுத்த வேண்டும். தொழிற்சாலைகளை அதிகரிக்க வேண்டும். சுற்றுலாத்துறையை மேம்படுத்த வேண்டும். ஏற்றுமதி தலங்களைப் பன்முகப்படுத்த வேண்டும். இவற்றைப் புரிந்துகொள்ளாமல் அரசு கட்டுப்பாடுகளைப் பிறப்பிக்கக் கூடாது. அரசிடம் இது குறித்து எந்தத் திட்டமும் இல்லை."

– என்றார்.

## மோ. சைக்கிள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலத்த காயத்துக்குள்ளான தம்பதிகளின் ஆண் பிள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கலேவெலயிலிருந்து குருநாகல் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள், வீதியைக் கடந்த நாய் மீது மோதியதில் வீதியின் ஓரத்தில் இருந்த பள்ளத்தில் வீழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் படுகாயமடைந்த மூவரும், கலேவெல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து, சிகிச்சை பலனின்றி தந்தையும், தாயும் உயிரிழந்ததுடன் மகன் மேலதிக சிகிச்சைக்காகத் தம்புள்ளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## பஸ் - லொறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விபத்து இன்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

இராணுவச் சிப்பாய்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நிட்டம்புவையில் இருந்து கிரிந்திவெல நோக்கிப் பயணித்த பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின்போது, பஸ் சாரதியும் அதில் பயணித்த 21 இராணுவச் சிப்பாய்களும் படுகாயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக வத்துப்பிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரிந்திவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 20 தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கில் தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை மனுக்களும் இதில் அடங்கும்.




# உலகில் ஓர் அழியாத அடையாளம்!

## பாப்பரசரின் மறைவுக்கு ஜனாதிபதி இரங்கல்

புனித பாப்பரசர் பிரான்சிஸின் மறைவுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இரங்கல் தெரிவித்துள்ளார்.

குறித்த இரங்கல் செய்தியை தனது எக்ஸ் தள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது,

“புனித பாப்பரசர் பிரான்சிஸின் மறைவுக்கு இலங்கை மக்கள் சார்பாக தனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அமைதி, இரக்கம் மற்றும் மனித நேயம் மீதான அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு உலகில் ஓர் அழியாத அடையாளத்தை ஏற்படுத்தியுள்ளது.

அவரது இரக்கம், நீதி மற்றும் மதங்களுக்கு இடையேயான நல்லிணக்கம் ஆகியவற்றின் மரபு, எதிர்வரும் தலைமுறைகளுக்குத் தொடர்ந்து ஊக்கமளிக்கட்டும்.” – என்றுள்ளது.

# சாமர சம்பத் எம்.பிக்கு விளக்கமறியல் நீடிப்பு



ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவை எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதுளை நீதிமன்ற நீதிவான் நுஜித் டி சில்வா உத்தரவிட்டுள்ளார்.

சாமர சம்பத் தசநாயக்க இன்று திங்கட்கிழமை காலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில் ஊவா மாகாண முதலமைச்சராக சாமர சம்பத் தசநாயக்க கடமையாற்றிய போது பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பை வழங்குவதற்காக மாகாண சபை ஊடாக வங்கியிலிருந்து 10 இலட்சம் ரூபாவை காசோலையாகப் பெற்று அதனைப் பணமாக மாற்றி தனிப்பட்ட தேவைக்காகப் பயன்படுத்தியமை உள்ளிட்ட ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், இன்று மீண்டும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சஹ்ரானுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைய, நாடாளுமன்ற நூலகத்தில் மாத்திரம் தற்போது வைக்கப்பட்டுள்ள உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான முழுமையான அறிக்கையைச் சபையில் சமர்ப்பித்து, மக்கள் மயப்படுத்தப்பட வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புபட்ட அனைத்து சக்திகளையும் அடையாளம் கண்டு, உண்மையை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துக்குக் காரணமானவர்கள் எந்தப் பதவி நிலையில் இருந்தாலும் அவர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டும்.

2019 ஆம் ஆண்டு செப்டெம்பர் 21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் உள்ள அனைத்து பரிந்துரைகளும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

சஹ்ரான் ஹாசீமுக்கும், இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல் சனல் 4 நிகழ்ச்சியின் முக்கிய சாட்சியான ஆஸாத் மௌலானா தெரிவித்த விடயங்கள் உட்பட சனல் 4 இன் ஆவணப் படத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து முழுமையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பேராயர் வலியுறுத்தினார்.



# மட்டு. சீயோன் தேவால குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களின் நினைவேந்தல்





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டு தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று திங்கட்கிழமை (21) தேவாலயத்தின் முன்பாக இடம்பெற்றது.

உயிரிழந்தவர்களின் உறவுகள் பலத்த பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் மெழுகுவர்தி ஏற்றி மலர் வைத்து மௌன அஞ்சலி செலுத்தினர்.

அகில இலங்கை கிறிஸ்தவ காங்கிரஸ் கட்சியின் தலைவர் சிவதர்சன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

குண்டுவெடிப்பில் உயிரிழந்து மற்றும் படுகாயமடைந்து பாதிக்கப்பட்டவர்களின் உறவுகள் கட்சியின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு காலை 9.05 தேவாலயத்தின் முன்பகுதியில் உயிரிழந்தவர்களின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து மெழுகுவர்த்தி ஏற்றி நிமிட அஞ்சலி மௌன செலுத்தினர்.

இந்த நினைவேந்தலையிட்டு அங்கு பலத்த பாதுகாப்புக் கடமையில் பொலிஸார், விமானப் படையினர் ஈடுபட்டனர். இந்தத் தற்கொலை குண்டு தாக்குதலில் 14 சிறுவர்கள் உட்பட 31 பேர் உயிரிழந்திருந்தனர். 80 பேர் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.



# முல்லைத்தீவில் வங்கியில் திருட்டு இளைஞன் சந்தேகத்தில் கைது!

(பா.சதீசன்)

முல்லைத்தீவில் வங்கி ஒன்றில் இடம்பெற்ற திருட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் நேற்று இரவு முல்லைத்தீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

முல்லைத்தீவு கூட்டுறவு கிராமிய வங்கி கடந்த 17ஆம் திகதி கூரைப் பகுதி உடைக்கப்பட்டு அங்கிருந்து பெறுமதியான கையடக்க தொலைபேசி ஒன்றும், 52 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளது.

அதனையடுத்து குறித்த வங்கி நிர்வகத்தால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதனை அடுத்து குறித்த கிராமிய கூட்டுறவு சங்கத்தில் பொருத்தப்பட்ட கண்காணிப்பு கருவியின் உதவியுடன், திருடப்பட்டதாக கூறப்படும் சந்தேக நபரின் முகநூலில் போடப்பட்ட தொலைபேசி பதிவையும் அடிப்படையகக் கொண்டு நேற்று (20) குறித்த திருட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொக்குளாய் பகுதியினை சேர்ந்த 25 வயதுடைய இளைஞன் ஆவார். அத்துடன் குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# மறைந்தார் திருத்தந்தை

ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப் பிரான்சிஸ் இன்று ரோம் நேரப்படி காலை 7:35 மணிக்கு காலமானார் என்று வத்திக்கான் அறிவித்தது.

“இன்று காலை 7:35 மணிக்கு ரோம் பிஷப் பிரான்சிஸ், தந்தையின் வீட்டிற்குத் திரும்பினார்.” - என வத்திகான் தொலைக்காட்சி சோகம் ததும்ப அறிவித்தது.

தமது 88 ஆவது வயதில் காலமான பாப்பாண்டவர் பிரான்சிஸ் கத்தோலிக்க திருச்சபையின் 266 ஆம் திருத்தந்தை ஆவார். 2013 மார்ச் 13ஆம் திகதி திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் பல தனித்துவச் சிறப்புகளுக்கு உரியவர்.

ஆர்ஜென்ரீனா நாட்டைச் சார்ந்த அவர் புவனர்ஸ் அயர்ஸ் உயர்மறைமாவட்டத்தின் பேராயராகவும் பணியாற்றியவர்.

தென்னமெரிக்காவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் திருத்தந்தை இவரே. மேலும், இயேசு சபையிலிருந்து திருத்தந்தைப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெருமகனும் இவர் ஆவார். மூன்றாம் கிரகோரிக்கு பின்பு கடந்த 1200 ஆண்டுகளில் ஐரோப்பாவுக்கு வெளியே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் திருத்தந்தை என்ற சிறப்பும் இவருக்கு உண்டு. 913இல் திருத்தந்தை லாண்டோவுக்குப் பின்பு தனக்கு முன் இருந்த திருத்தந்தையரின் பெயரை தனது ஆட்சிப்பெயராகத் தெரிவு செய்யாத இரண்டாம் திருத்தந்தை இவர் ஆவார்.

பல நாள்களாக மூச்சுக்குழாய் அழற்சியால் அவதிப்பட்ட பின்னர், பெப்ரவரி 14, 2025 வெள்ளிக்கிழமை அன்று, திருத்தந்தை பிரான்சிஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரது மருத்துவ நிலை படிப்படியாக மோசமடைந்தது. பெப்ரவரி 18 அன்று அவருக்கு இருதரப்பு நிமோனியா இருப்பதாக மருத்துவர்கள் கண்டறிந்தனர். 38 நாள்கள் மருத்துவமனையில் இருந்த பிறகு, தொடர்ந்து குணமடைய தனது வத்திக்கான் இல்லத்திற்கு திருத்தந்தை பிரான்சிஸ் திரும்பினார். இருப்பினும், அவரது உடல்நிலை தொடர்ந்து மோசமடைந்ததால், இன்று காலை அவர் காலமானார்.

‘‘அவரது முழு வாழ்க்கையும் இறைவனுக்கும் அவரது திருச்சபைக்கும் சேவை செய்வதற்காக அர்ப்பணிக்கப்பட்டது. நற்செய்தியின் மதிப்புகளை விசுவாசத்துடனும், தைரியத்துடனும், உலகளாவிய அன்புடனும், குறிப்பாக ஏழைகள் மற்றும் மிகவும் ஒதுக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக வாழ அவர் எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார். கர்த்தராகிய இயேசுவின் உண்மையான சீடராக அவரது முன்மாதிரிக்கு மிகுந்த நன்றியுடன், போப் பிரான்சிஸின் ஆன்மாவை ஒரே மற்றும் மூவொரு கடவுளின் எல்லையற்ற இரக்கமுள்ள அன்புக்கு நாங்கள் சமர்ப்பிக்கிறோம்.’’ - என்று வத்திக்கான் தொலைக்காட்சி அறிவித்தது.

அன்பே அவர் உலகுக்கு விட்டுச் செல்லும் செய்தி, வழிகாட்டல், உபதேசம் எல்லாம். அதைத் தொடர்வோம்!

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# ஆலையடிவேம்பு பிரதேசத்தில் தமிழரசு வேட்பாளர் அறிமுகம்!



( வி.ரி. சகாதேவராஜா)

ஆலையடிவேம்பு பிரதேச இலங்கைத் தமிழரசு கட்சியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வும் மாபெரும் பொது கூட்டமும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் தலைமையில் அக்கரைப்பற்று சாகாம வீதியில் நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், ஞா.சிறிநேசன், டாக்டர் இ.சிறிநாத் மற்றும் க.கோடீஸ்வரன் ஆகியோர் பிரதான அதிதிகளாக கலந்து கொண்டனர்.

கட்சியின் கல்முனை தொகுதி அமைப்பாளர் அ.நிதான்சன் உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.





# ஊழலற்ற ஆட்சியை முன்னெடுப்பதற்கான உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகின்றோம்!

## ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டு வேட்பாளர் தெரிவிப்பு




(பழுவூரான்)

முன்பிருந்த ஆட்சியாளர்கள் கடந்த காலங்களில் தன்னிச்சையான முடிவுகளை எடுத்து வந்தனர். எமது கட்சி ஆரம்பிக்கப்பட்டது முதல் முதலாக இம்முறை தான் எமது தொலைபேசி சின்னத்தில் போட்டியிட முன்வந்துள்ளோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாநகர சபை முதன்மை வேட்பாளர் எஸ். ரகுநாதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது,

எமது கட்சியின் வெற்றிக்கான தேர்தல் பணிகளை நாம் தற்போது முன்னெடுத்து வருகின்றோம். நாம் சிறந்த வேட்பாளர்களையே களம் இறக்கி உள்ளோம்.

பொது மக்களுக்கான சேவையை உருவாக்க நாம் திட்டமிட்டுள்ளோம். எமது வேட்பாளர்களின் கடின உழைப்பால் நாம் இந்த முறை நிச்சயம் வெற்றி பெற்று இந்த மாநகர சபையை கட்டியெழுப்பப் பாடுபடுவோம்.– என்றார்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# தேர்தல் ஒன்றில் வெற்றி பெறுவதற்காக மக்களை நம்ப வைத்து ஏமாற்றக் கூடாது

## சுயேச்சை வேட்பாளர் உதுமாண்கண்டு நாபீர் தெரிவிப்பு

(எம்.ஏ.றமீஸ்)

தேர்தல் ஒன்றில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக மக்களை நம்ப வைத்து ஏமாற்றும் கலாசாரம் இனியும் தொடரக் கூடாது. யார் சேவை செய்யக் கூடியவர்கள் யார் வாக்குகளைச் சூறையாடி சுய தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியவர்கள் என்பதை நன்கு அறிந்து தேர்தலுக்கான வாக்குகளை அளிக்க வேண்டும்.

இவ்வாறு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சம்மாந்துறை பிரதேசத்தில் போட்டியிடும் சுயேச்சைக்குழு-01 ஐச் சேர்ந்தவரும், நாபீர் பவுண்டேஷன் ஸ்தாபக தலைவரும் பொறியியலாளருமான கலாநிதி உதுமாண் கண்டு நாபீர் தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேசத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சுயேட்சைக் குழுவின் தேர்தல் பிரசாரக் கூட்டமும் ஊடகவியலாளர் சந்திப்பும் நாபீர் பௌண்டேஷன் பணிமனையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாம் கடந்த மூன்று தசாப்த காலமாக எந்தவொரு அரசில்வாதியினாலும் செய்ய முடியாத பல்வேறு வேலைத் திட்டங்களை மக்களுக்காக செய் திருக்கின்றோம்.





மக்கள் நல வேலைத் திட்டங்களை மேற்கொண்ட நாம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சுயேட்சையாக ஒரு அணியைக் களமிறங்கியுள்ளோம். எமது வெற்றியானது ஏனைய கட்சிகளுக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் நிலை தற்போது ஏற்பட்டிருக்கின்றது.

நாம் தேர்தலுக்காக சேவைகள் செய்பவர்கள் அல்ல. அரசியல் நோக்கமற்றிருந்த எம்மை மக்கள் அணுகி மக்களுக்காக செய்து கொண்டிருக்கும் பல்வேறு வேலைத் திட்டங்களுக்கு அரசியல் அதிகாரமும் தேவையாக இருப்பதால், அரசியலில் களமிறங்குமாறு நீண்ட காலமாக மக்கள் எம்மிடம் கோரிக்கை விடுத்து வந்தனர். அதன் காரணமாகவே நாம் எமது பிரதேச மக்களுக்கு சேவையாற்றும் தூய எண்ணத்துடன் சுயேட்சையாக களமிறங்கியுள்ளோம்.

அம்பாறை மாவட்டத்தில் வியாபார அரசியல் செய்து கொண்டிருக்கும் சில கட்சிகளின் சித்தாந்தத்தை மக்கள் நன்கு தெரிந்து வைத்துள்ளனர். ஏமாற்று கலாசாரம் இந்தத் தேர்தலுடன் முடியுறுத்தப்பட வேண்டும். வீரவசனம் பேசி உரிமை என்றும் சமூகம் என்றும் மக்களை ஏமாற்றுபவர்களுக்கு இந்தத் தேர்தலில் தக்க பாடம் புகட்ட நமது மக்கள் தயாராகி விட்டனர்.

மிகப் பெரும் மக்கள் தொகையைக் கொண்ட சம்மாந்துறை பிரதேசத்தில் தற்போது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் இன்றி மக்கள் அல்லல் பட்டுக் கொண்டிருக்கின்றனர். மக்களை ஏமாற்றும் சில அரசியல்வாதிகளை நமது மக்கள் தற்போது நன்கு இனம் கண்டமையால் தினமும் பல மாற்றுக் கட்சியினர் எமது சுயேட்சை அணியோடு சாரைசாரையாக இணைந்து வருகின்றனர்.

மக்களின் பெரும் ஆதரவுடன் இந்தத் தேர்தலில் எமது சுயேட்சைக்குழு சம்மாந்துறைப் பிரதேச அதிகாரத்தைக் கைப்பற்றும்.- என்றார்.





EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME



(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



## மாமனிதர் சந்திரநேருவுக்கு அஞ்சலி செலுத்தி மக்கள் சந்திப்பை ஆரம்பித்த சுயேச்சைக் குழு!

( வி.ரி.சகாதேவராஜா)

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் திருக்கோவில் பிரதேச சபைக்காக 'வண்டில்' சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சை குழுத் தலைமை வேட்பாளர் சு.சசிகுமாரின் தலைமையில் மக்கள் சந்திப்பு வேலைத்திட்டம் ஆரம்பமாகியது.

முதற்கட்டமாக குழுவினர் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தை தரிசித்தனர்.

பின்பு மக்களுக்காக போராடி உயிர்நீத்த அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் கப்டன் அ.சந்திரநேருவின் நினைவுத் தூபியடிக்குச் சென்று அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து மக்கள் சந்திப்புகளை நடத்தினர்.

இதன்போது அவரது ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.



## தேர்தல் பிரசார அலுவலகங்கள் காத்தான்குடியில் திறந்து வைப்பு!



(நூருல் ஹுதா உமர்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், காத்தான்குடி நகர சபையில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக போட்டியிடும் காத்தான்குடி மீராப்பள்ளி வட்டார வேட்பாளர் ஈ.எம். றுஸ்வினை ஆதரித்து தேர்தல் பிரசார அலுவலகம் திறந்து வைக்கும் நிகழ்வும், காத்தான்குடி பதுரியா வட்டார வேட்பாளர் எம்.ஐ.எம். அஜ்வத் பலாஹினை ஆதரித்து தேர்தல் பிரச்சார அலுவலகம் திறந்து வைக்கும் நிகழ்வும், காத்தான்

தொடர்ச்சி ▼

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

## தேர்தல் பிரசார அலுவலகங்கள் காத்தான்குடியில் திறந்து வைப்பு!





**தொடர்ச்சி ▲**

குடி அன்வர் வட்டார வேட்பாளர் எம். எச்.எம். றிஸ்வியை ஆதரித்து தேர்தல் பிரசார அலுவலகம் திறந்து வைக்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹஅவற்றைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

இந்த நிகழ்வுகளில் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், காத்தான்குடி பிரதேச கட்சியின் மத்திய முழு உறுப்பினர்கள், ஊர் பிரமுகர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## ஆசியாவின் ஆச்சரியமிக்க நகரமாக காத்தான்குடியை நாம் மாற்றுவோம்!

### அதற்கான திட்டம் எம்மிடமுள்ளது என்கிறார் ஹிஸ்புல்லாஹ் எம்.பி.

**(நூருல் ஹுதா உமர், சினிஸ்கான்)**

ஆசியாவின் ஆச்சரியமிக்க நகரமாக காத்தான்குடி நகரம் மாற்றப்படும். அதற்கான அனைத்து திட்டங்களும் எம்மிடமுள்ளது. மிக விரைவில் அதனை நிறைவேற்றி பிரபல்யமிக்க சுற்றுலா நகரமாக மாற்றப்படும்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் காத்தான்குடி நகர சபையில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து மாபெரும் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினர் ராஸிக் தலைமையில் காத்தான்குடி அல்–அக்ஸா சதுக்கத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் கலந்துகொண்டார்.

அவர் இதன்போது கருத்துத்தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் எதையெல்லாம் நாங்கள் பேசினோமோ அவற்றை எல்லாம் நிறைவேற்ற நாங்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். எம்மால் முடிந்த சிலவற்றை செய்திருக்கிறோம்.

காத்தான்குடி நகர சபைக்குட்பட்ட பன்னிரெண்டு கிலோ மீற்றர் வீதியை




காப்பெட் வீதியாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது இன்னம் இரண்டு மாதங்களுக்குள் நிறைவடையும்.

அதேபோன்று, காத்தான்குடி நகர சபைக்கு உட்பட்ட அனைத்து வீதிகளுக்கும் காப்பெட் இடும் பணி எதிர்வரும் டிசெம்பர் மாதமளவில் நிறைவு செய்வதற்கும் அனைத்தும் முயற்சிகளையும் மேள்கொண்டிருக்கிறோம்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் காத்தான்குடி நகர சபையை வெல்வதற்கு எந்த சவாலும் எமக்கில்லை. பத்து வட்டாரங்களையும் மிக இலகுவாக வெல்வோம்.

எம்மோடு மேலும் சில கட்சிகள் இணைவதற்கு ஒப்பந்தம் செய்துள்ளன. காத்தான்குடி நகர சபையை அதிக பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டு முழுமையான அதிகாரத்தை பெற்று ஆட்சியமைப்பதற்கு உரிய அனைத்து வியூகங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

ஆசியாவின் ஆச்சரியமிக்க நகரமாக காத்தான்குடி நகரம் மாற்றப்படும். அதற்கான அனைத்து திட்டங்களும் எம்மிடமுள்ளது. மிக விரைவில் அதனை நிறைவேற்றி பிரபல்யமிக்க சுற்றுலா நகரமாக மாற்றப்படும்.– என தெரிவித்தார்.

இதன்போது, கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், பிரதேச மத்திய குழு உறுப்பினர்கள், காத்தான்குடி நகர சபை வேட்பாளர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், ஊர் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பிரான்ஸில் நடைபெற்றுள்ள தமிழீழ நாட்டுப்பற்றாளர் நாள்






பிரான்சின் பாரிசின் புறநகர்களில் ஒன்றான அன்ரனி மான்கிங் நகரில் நேற்று (20) ஞாயிற்றுக்கிழமை தமிழீழ நாட்டுப்பற்றாளர் நாளும், தியாகச் சுடன் அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வும் எழுச்சியுடன் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச் சுடரினை டாரன்சி நகரின் முதலாவது துணை நகரபிதா

தொடர்ச்சி ▼

தொடர்ச்சி ▲



# பிரான்ஸில் நடைபெற்றுள்ள தமிழீழ நாட்டுப்பற்றாளர் நாள்

தொடர்ச்சி ▲

அன்ரனி மான்கிங் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து ஈகைச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டது. அகவணக்கம், மலர் வணக்கம் ஆகியன இடம்பெற்றன.

குறித்த நிகழ்வின் டாரன்சி நகரின் முதலாவது துணை நகரபிதா அன்ரனி மான்கிங்கும் அன்ரனி மான்கிங் நகரின் ஏழாவதுதுணைநகரபிதாசீன்சைன்டென்ஸ், மாவட்ட சபை உறுப்பினர் ஹமிட் சபானி யும் பங்கேற்று சிறப்புரை வழங்கியி ருந்தனர்.

தொடர்ந்து பிரான்சிஸ் வாழும் தமிழ் இளையோர்களின்எழுச்சிநடனம்,கவிதை, பேச்சு, ஆகிய நிகழ்வுகளும் நடைபெற்றன.

இந்த நிகழ்வை பிரான்ஸை தள மாகக் கொண்டு இயங்கும் தமிழ் பண் பாட்டு வலயம் ஒழுங்கமைத்தது.




# மாணவப் பருவத்தைச் சரியாகப் பயன்படுத்தினால் எதிர்காலத்தை வளப்படுத்தி சிறப்பாக வாழமுடியும்

## மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் றொனால்ட் தெரிவிப்பு

(த.சுபேசன்)

வளரிளம் பருவ மாணவர்கள் மாணவப் பருவ சக்தியைச் சரியாகப் பயன்படுத்தினால் எதிர்காலத்தின் சிறந்த தலைவர்களாக மிளிர முடியும் எனப் பூநகரிப் பிரதேச மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வளரிளம்பருவ மாணவர்களுக்கான விசேட செயலமர்வொன்று பூநகரி மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார். மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

வளரிளம்பருவ மாணவர்களில் ஓமோன்களின் செயற்பாட்டால் மூளையில் இரசாயன மாற்றங்கள் ஏற்பட்டு உணர்வெழிச்சிகள் மேலோங்கிக் காணப்படும்.

ஆனால் அதைக் கட்டுப்படுத்திச் சரியான தீர்மானம் எடுக்கும் முன் மூளையின் மேற்பட்டைப் பகுதி இருபத்து மூன்று வயதுவரை பூரணமாக விருத்தியடைந்திருக்காது. எனவே தீர்மானங்களை எடுக்கும் முன்னர் தாய், தந்தை, ஆசிரியர் மற்றும் பெரியோரிடம் கலந்தாலோசிப்பது சரியான தீர்மானமெடுக்க உதவியாக அமையும்.



வளரிளம்பருவ உணர்ச்சிகளால் பிறழ்வான பாதுகாப்பற்ற பாலியல் நடவடிக்கைகளுக்கு உட்பட்டால் பாலியல் நோய்கள் ஏற்படும் அபாயம் அதிகரிப்பதோடு, பாலியல் துஷ்பிரயோகங்களால் மனவடு மற்றும் ஆரோக்கியமற்ற மனநிலை ஏற்பட்டு எதிர்காலம் கேள்விக்குறியாக மாறி விடும்.

பதினெட்டுவயதுக்கு கீழ் பாலியல் உறவைத் தவிர்த்தல், திருமணத்தின் முன்னான பாலியல் உறவினைத் தவிர்த்தல் என்பனவற்றைக் கடைப்பிடித்து கல்வியில் கவனம் செலுத்தி எதிர்காலத்தை வளமானதாக மாற்ற வேண்டும்.

பாலியல் நோய்களை ஆரம்பத்திலேயே இனங்கண்டு சிகிச்சைகளைப்பெற முன்வருவதோடு வலைத்தளங்களில் கிடைக்கும் தவறானதும் மிகைப்படுத்தப்பட்டதுமான பாலியல் சார்ந்த தகவல்களைத் தவிர்த்து சரியான இனப்பெருக்க சுகாதார அறிவை சுகாதார உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரிடம் இருந்து பெற்று பாதுகாப்பான வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும்.

ஆரோக்கியமான குடும்ப வாழ்வை அமைப்பதற்கு வளரிளம்பருவத்திலேயே சரியான இனப்பெருக்க சுகாதார அறிவைப்பெற்று அதன்படி ஒழுக அனைவரும் உறுதி பூணவேண்டும்.- என்றார்.


குணம்ஸ் சுப்பர்மார்க்கட்
GUNAAM SUPERMARKET
குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998






# கஞுவாஞ்சிக்குடியில் நடைபெற்ற இரத்ததானம்!

( வி.ரி. சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக ஊழியர் நலன் புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் இரத்ததான நிகழ்வானது தொடர்ச்சியாக இந்த வருடமும் 8 ஆவது தடவையாக ஒழுங்கு செய்யப்பட்டு இன்று திங்கட்கிழமை (21) நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலை இரத்த வங்கியுடன் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான நிகழ்வு பிரதேச செயலாளர் உ. உதயஸ்ரீதர் தலைமை மற்றும் வழிகாட்டுதலில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

விளையாட்டு கழகங்கள், இளைஞர் கழகங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள், பாதுகாப்பு படையினர், பொதுமக்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என நூற்றுக்கும் அதிகமானோர் இந்த உன்னதமான நிகழ்வில் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கியிருந்தனர்.













# திம்பிலியில் அறநெறிப் பாடசாலை நேற்று தொடக்கிவைப்பு நிகழ்வு

## ரவிகரன் எம்.பி. பங்கேற்பு

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பிரதேசசெயலகப் பிரிவுக்கு உட்பட்ட திம்பிலிப் பகுதியில் 'கருமாரி' அறநெறிப் பாடசாலை தொடக்க நாள் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றார்.

திம்பிலி பகுதியில் அமைந்துள்ள கருமாரி அம்மன் ஆலயமுன்றலில் இடம்பெற்ற இந்த நிகழ்வு பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றது. அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், விருந்தினர்களது உரைகள் என்பனவும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் கிராமமட்ட பொது அமைப்புகமகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.







# திருநாவுக்கரசு நாயனார் குருபூசை!

(பழுவூரான்)

கல்லடி ஸ்ரீ சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலை நடத்திய திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நேற்று ஞாயிற்றுக்கிழமை (20) கல்லடி விநாயகர் வித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அறநெறிப் பாடசாலை அதிபர் திருமதி சக்தி அருட்ஜோதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கல்லடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ பாலசதீஸ்வரக்குருக்கள் ஆன்மீக அதிதியாகவும், முன்னாள் மட்டக்களப்பு மாநகர முதல்வரும், கல்லடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத் தலைவருமான தியாகராஜா சரவணபவன், சைவப் புலவர் திருமதி சிவஞானஜோதி ஞானசூரியம், கோபாலசிங்கம் தங்கவடிவேல் மற்றும் கல்லடி விநாயகர் வித்தியாலய அதிபர் சிவலோஜினி விநோதன் ஆகியோர் அதிதிகளாக க் கலந்து கொண்டனர்.

ஆரம்ப நிகழ்வாக கல்லடி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய முன்றலிலிருந்து ஆன்மீக ஊர்வலம் ஆரம்பமாகி விநாயகர் வித்தியாலய த்தை வந்தடைந்தது. தொடர்ந்து நாவுக்கரசர் குருபூசை வழிபாடு இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து தேவாரம், நடனம், கதாப்பிரசங்கம், பேச்சு ஆகிய நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

இந்த நிகழ்வில் அறநெறி ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.











# கிழக்கு வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் நஸிருக்குப் பிரியாவிடை!

(அபு அலா)

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மோட்டார் போக்குவரத்து மற்றும் பயணிகள் போக்குவரத்து, கட்டடங்கள் மற்றும் நிர்மாணம், வீடமைப்பு, கிராமிய மின்சாரம் மற்றும் நீர்வழங்கள் அமைச்சின் செயலாளராக கடமையாற்ற வந்த எம்.எம்.நஸீரின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சில் இடம்பெற்ற இந்த பிரியாவிடை நிகழ்வில் கிழக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள மாகாண ஆணையாளர் திருமதி த.வருணி உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள் திணைக்களத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் பங்கேற்று ஓய்வு பெற்றுச் செல்லும் செயலாளர் எம்.எம்.நஸீருக்கு பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் மற்றும் வாழ்துமடல், பரிசுப் பொருள்கள் வழங்கினர்.

தனது 60 வயதை பூர்த்தி செய்து ஓய்வு பெற்றுச் செல்லும் இவர், கிழக்கு மாகாணத்தில் மாகாண விவசாய, கூட்டுறவு அமைச்சின் செயலாளராகவும், பேரவைச் செயலக செயலாளராகவும், பிரதிப் பிரதம செயலாளராகவும் (நிருவாகம்) பதவிகளை வகித்தமை குறிப்பிடத்தக்கது.








# மட்டக்களப்பு கருவப்பங்கேணியில் உயிர்நீத்த உறவுகள் நினைவுகூரல்!

**(பழுவூரான், அபு அலா, மட்டு. துஷாரா, த.ஜெபி ஜனார்த்)**

மட்டக்களப்பு, கருவேப்பங்கேணி புனித சூசையப்பர் தேவாலயத்துக்கு அருகாமையில் இன்று திங்கட்கிழமை (21) காலை 6 மணிக்கு ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் பலியான உறவுகள் நினைவு கூரப்பட்டனர்.

2019 ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 31 ஆத்மாக்களுக்கும் விளக்குகள் ஏற்றப்பட்டு, மலர்களால் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்தோடு ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது. தேவாலயத்தின் பங்குத்தந்தை ஜோச் ஜீவராஜால் கூட்டுத்திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கிராமத்தின் பொது மக்கள், மற்றும் இளைஞர்கள், யுவதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# தேவைப்பாடுடைய குடும்பங்களுக்கு நல்லின ஆடுகள் வழங்கி வைப்பு!

**(த.சுபேசன்)**

யாழ். மாவட்டத்தில் தேவைப்பாடுடைய மூன்று குடும்பங்களுக்கு, அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் முகமாக அண்மையில் நல்லின ஆடுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

எலிபன்ற் எயிட் ஹெல்பிங் கியூமன் அமைப்பின் நிதிப் பங்களிப்பில் சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம் ஊடாக இந்த வாழ்வாதார உதவித் திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.



# குடும்பத்துடன் இந்தியா சென்றார் அமெரிக்காவின் துணை ஜனாதிபதி



அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ் தனது குடும்பத்தினருடன் 4 நாள்கள் பயணமாக இன்று இந்தியா சென்றுள்ளார். மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் புதுடில்லி விமான நிலையத்தில் அவர்களை வரவேற்றார்.

துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ், அவரது இந்திய வம்சாவளி மனைவி உஷா சிலுகுரி மற்றும் 3 குழந்தைகள் இந்தியா சென்றுள்ளார். விமான நிலையத்தில் இராணுவ அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. மேலும், பரத நாட்டியம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வரவேற்பு அளிக்கப்பட்டது.

டில்லியில் உள்ள ஐ.டி.சி. மவுரியா ஷெரட்டன் ஹோட்டலில் ஜே.டி.வான்ஸ் குடும்பத்தினர் தங்குகின்றனர். அவர்களை வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்துப் பேச இருக்கிறார். பிரதமர் நரேந்திர மோடியை, ஜே.டி. வான்ஸ் இன்று மாலை 6.30 மணி அளவில் சந்திக்க இருக்கிறார். டில்லியில் கல்யாண் மார்க்கில் உள்ள பிரதமரின் அதிகாரப்பூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற இருக்கிறது. பிரதமர் மோடி இன்று அவர்களுக்கு இரவு விருந்தளிக்கிறார்.

பிரதமர் மோடி உடனான சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்த பேச்சுவார்த்தை இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த பேச்சுவார்த்தையில் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி மற்றும் அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் வினய் மோகன் குவாத்ரா ஆகியோர் இடம்பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வான்ஸ் மற்றும் அவரது குடும்பத்தினர் டில்லியில் உள்ள அக்ஷர்தாம் கோவிலுக்குச் செல்ல திட்டமிட்டுள்ளனர். இதையடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. "அக்ஷர்தாம் கோயிலில் மேம்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். எங்கள் குழுக்கள் அங்கு நிறுத்தப்பட்டுள்ளன. அமெரிக்க துணை ஜனாதிபதி வருகை நிறைவடையும் வரை எங்கள் குழுக்கள் அங்கு இருக்கும்" என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை விரைவில் இறுதி செய்வது மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளின் ஒட்டுமொத்த பாதையை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து இந்தக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்படும் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜே.டி. வான்ஸ் மற்றும் அவரது குடும்பத்தினரின் வருகையை முன்னிட்டு டில்லி முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

"அமெரிக்க துணை ஜனாதிபதியின் வருகையை ஒட்டி பாதுகாப்பு நெறிமுறையின்படி நாங்கள் ஏற்கனவே பயிற்சிகளை நடத்தியுள்ளோம். எல்லாம் சீராக நடைபெறுவதையும், வருகையின் போது எந்த அசம்பாவித சம்பவமும் நடக்காமல் இருப்பதையும் உறுதி செய்வதற்காக டெல்லியின் பல்வேறு பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது," என்று அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க துணை அதிபர் செல்லும் பாதைகள் தெளிவாக இருப்பதை டெல்லி போக்குவரத்து காவல்துறையும் உறுதி செய்யும் என்று அவர் கூறினார்.

இன்று இரவு ஜே.டி.வான்ஸ் குடும்பத்தினர் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் செல்கின்றனர். அங்கு அவர்கள் ராம்பாஹ் பேலஸில் தங்குகின்றனர். நாளை அவர்கள் அமீர் கோட்டையை பார்வையிடுகின்றனர். ராஜஸ்தான் சர்வதேச மையத்தில் நாளை மாலை இந்திய குழுவினருடன் ஜே.டி.வான்ஸ் ஆலோசனை நடத்துகிறார். இதில் ட்ரம்ப் நிர்வாகத்தின் கீழ் இந்தியா-அமெரிக்கா இடையிலான உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

நாளை மறுநாள் ஆக்ரா சென்று தாஜ்மஹாலை, வான்ஸ் குடும்பத்தினர் பார்வையிடுகின்றனர். ஷில்ப்கிராம் பகுதியில் உள்ள இந்திய கைவினைப் பொருள்கள் விற்கப்படும் திறந்தவெளி சந்தையையும் அவர்கள் பார்வையிடுகின்றனர். 24 ஆம் திகதி அன்று ஜெய்ப்பூரில் இருந்து ஜே.டி.வான்ஸ் அமெரிக்கா புறப்படுகிறார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஒவ்வொரு மூன்று நிமிடங்களுக்கு ஒருவர் வீதி விபத்தினால் உயிரிழப்பு

இந்தியாவில், ஒவ்வொரு மூன்று நிமிடங்களுக்கு ஒருவர் வீதி விபத்தினால் உயிரிழகின்றார் என அண்மையத் தரவுகளில் தெரியவந்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் மாத்திரம் வீதி விபத்தினால் 172,000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி ஆண்டில் 10,000 சிறுவர்கள் பலியாகியுள்ளனர் என கூறப்படுகிறது.



அடிப்படை பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இல்லாமையே அதிக விபத்துக்கள் சம்பவிக்க காரணம் என குறிப்பிடப்படுகிறது.

இந்தியா, அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 வீதத்தை விபத்துக்களுக்காக செலவிடுகிறது.



# போப் பிரான்சிஸ் காலமானார்

கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப் பிரான்சிஸ் உயிரிழந்ததாக வத்திகான் அறிவித்துள்ளது.

88 வயதான போப் பிரான்சிஸ் நுரையீரல் தொற்று காரணமாக நீண்ட காலமாக போராடி வந்தார்.

அண்மையில் இவரது உடல்நிலை மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தது. பல்லாயிரக்கணக்காணவர்களின் பிரார்த்தனையால் அதிலிருந்து போப் பிரான்சிஸ் மீண்டு வந்திருந்தார்.

எனினும் இன்று அவர் உயிரிழந்துள்ளார் என வத்திகான் அறிவித்துள்ளது.

அத்தோடு, உயிரிழப்பதற்கு முன்னதாக வத்திக்கானில் உள்ள புனித பேதுரு பேராலயத்தில் நேற்று நடைபெற்ற ஈஸ்டர் ஆராதனையிலும் அவர் பங்கேற்றிருந்தார்.

இந்த நிலையில், போப் உயிரிழந்து விட்டார் என கார்தினால் கெவின் ஃபாரெல் இன்று வத்திக்கான் தொலைக்காட்சியில், "அன்புள்ள சகோதர சகோதரிகளே, நமது பரிசுத்த தந்தை பிரான்சிஸின் மரணத்தை நான் ஆழ்ந்த சோகத்துடன் அறிவிக்க வேண்டும்" என அறிவிப்பை வெளியிட்டார்.

# ட்ரம்ப்பின் வரிகள் தொடர்பாக பேச்சுக்களில் ஈடுபடுகின்ற நாடுகளுக்கு சீனா எச்சரிக்கை



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் வரிகள் தொடர்பாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் நாடுகளை எச்சரிக்கும் வகையில் அறிக்கையொன்றை சீனா வெளியிட்டுள்ளது.

இறக்குமதி வரிக்கு விலக்கு அளிப்பதற்கு ஈடாக சீனாவுடனான வர்த்தகத்தை கட்டுப்படுத்துவதற்கு உலக நாடுகள்மீது அழுத்தம் கொடுப்பதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக வெளியான செய்திக்கு பதிலளிக்கும் விதமாக சீன வர்த்தக அமைச்சின் பேச்சாளர் அந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் புதிய வரி தொடர்பில் உலக நாடுகள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளன.

இதன்படி, ஜப்பானிய தூதுக்குழு கடந்த வாரம் அமெரிக்காவுக்கு சென்றதுடன் தென்கொரியா இந்த வாரம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த நிலையில், வரி விலக்குக்காக சமாதானப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஊடாக அமைதியை கொண்டு வர முடியாது என சீன வர்த்தக அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சீனாவின் நலன்களை பணயம் வைத்து எட்டப்படும் எந்தவொரு ஒப்பந்தத்தையும் உறுதியாக எதிர்ப்பதாகவும் சீன வர்த்தக அமைச்சின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

# புதிய நிறம் கண்டுபிடிப்பு



மனிதர்கள் இதுவரை கண்டிராத புதிய நிறத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்து அறிவியல் உலகில் மாபெரும் சாதனையைப் படைத்துள்ளனர்.

இந்த நிறத்தை வெறும் கண்களால் பார்க்க முடியாது என்றும் லேசர் உதவியால் மட்டுமே இதை பார்க்க முடியும் எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கலிபோர்னியா பல்கலைக்கழத்தின் கீழ் இயங்கும் பார்க்லியில் பணியாற்றும் விஞ்ஞானிகள் குறித்த சாதனையை படைத்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் 'குறித்த நிறத்தினை வெறும் கண்களால் பார்க்க முடியாது எனவும், கண்களில் லேசர் ஒளியை துல்லியமாக செலுத்தி கண்களுக்கு பின் உள்ள 'கோன்' எனும் நிறம் உணரும் செல்களை தூண்டுவதன் மூலம் இந்த நிறத்தினைப் பார்க்க முடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் குறித்த நிறத்திற்கு ஓலோ (Olo) என பெயரிட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை லேசர் உதவி மூலம் குறித்த நிறத்தனைப் பார்த்தவர்கள் நீலம்-பச்சை கலந்த நிறத்தில் அந்த நிறம் இருந்ததாகவும், ஆனால் வழக்கமான நீலம் பச்சை நிறத்தை போல அல்லாமல் அது வித்தியாசமாக இருந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கனடா முரசு

பக்கங்கள் - 3

திங்கட்கிழமை 21/04/2025

## கனடா டி-10 லீக்கிற்கு 1300 இற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பதிவு






C2 ▶




# கனடாவில் இந்துக் கோவில்கள் மீது காலிஸ்தான் ஆதரவாளர்கள் தாக்குதல்

கனடாவில் இந்து கோவில்கள் மீது காலிஸ்தான் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கனடாவின் வான்கூவர் நகரில் உள்ள குருத்வாராவை கோவில் மீதே நேற்று காலிஸ்தான் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கோவிலின் சுவர்களை சேதப்படுத்தியுள்ளதோடு சுவர்களில் மையில் காலிஸ்தான் ஆதரவு வாசகங்களையும் எழுதி வைத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சூழலில், மற்றுமொரு இந்து கோவிலான லட்சுமி நாராயணன் கோவிலையும் காலிஸ்தான் ஆதரவாளர்கள் சேதப்படுத்தியுள்ளனர்.

இந்த கோயில் ஞாயிற்றுக்கிழமை இரவு மூன்றாவது முறையாக சேதப்படுத்தப்பட்டதாக கனேடிய பத்திரிகையாளர் டேனியல் போர்ட்மேன் கூறியுள்ளார்.

இந்த சம்பவத்தை திங்கட்கிழமை வெளியிட்டுள்ள காணொலி பதிவில் விளக்கியுள்ளார்.

C2 ▶



# மலையேறி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்

கனடாவின் நோர்த் வென்கூவர் பகுதியில், மலையேறி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கையின் பின், மவுண்ட் சீமூர் மலை அருகே காணாமல் போன மலையேறியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

காலை 9:40 மணியளவில், நோர்த் சோர் North Shore Rescue மீட்புக் குழு சமூக ஊடகங்களில் வெளியிட்ட செய்தியின்படி, “மவுண்ட் சீமூரில் ஒரு ஹைக்கரை தேடும் பணியில் எங்கள் குழு ஈடுபட்டுள்ளது” என தெரிவித்திருந்தது.

அதனைத் தொடர்ந்து பிற்பகலில், நோர்த் வென்கூவர் பொலிஸார் வெளியிட்ட அறிக்கையில்,

C2 ▶

# கனடா டி-10 லீக்கிற்கு 1300 இற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பதிவு








இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் யுவராஜ் சிங்கின் ஆதரவுடன் நடைபெறவுள்ள கனடா சூப்பர் 60 டி:10 லீக்கில் விளையாடுவதற்காக 1300 இற்கும் மேற்பட்ட ஆண் மற்றும் பெண் வீரர்கள் பதிவு செய்துள்ளனர்.

பதிவுகளில் 34 வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த சுமார் 1,135 ஆண் மற்றும் 235 பெண் கிரிக்கெட் வீரர்களும் அடங்குவர்.

ஃபின் ஆலன், சிக்கந்தர் ராசா, நசீம் ஷா, அலெக்ஸ் ஹேல்ஸ், ஷமர் ஜோசப், ஜேசன் ராய், கேஷவ் மகாராஜ், டிம் சீஃபர்ட், டிம் சவுத்தி, ஜிம்மி நீஷம், அசாம் கான், லுங்கி நிகிடி, ரிலீ ரோசோவ், கிறிஸ் லின், ஜேசன் ஹோல்டர், ஆண்ட்ரே பிளெட்சர், கைல் மேயர்ஸ், தப்ரைஸ் ஷம்சி, பானுகா ராஜபக்ஷ, மார்ட்டின் குப்தில், டேவிட் மாலன், மெஹிடி ஹசன் மிராஸ், டான்சித் ஹசன் தமீம், சாட் போவ்ஸ் மற்றும் குடகேஷ் மோதி ஆகியோர் எட்டு அணிகள் கொண்ட லீக்கில் பங்கேற்க ஒப்புக்கொண்ட முன்னணி ஆண் சர்வதேச வீரர்களில் அடங்குவர்.

இந்த லீக்கில் குறுகிய கால 10 ஓவர்கள் கொண்ட போட்டி இடம்பெறுகிறது.

போட்டிகள் சுமார் 90 நிமிடங்கள் நீடிக்கும், ஒவ்வொரு அணியும் 10 ஓவர்கள் (60 பந்துகள்) துடுப்பாட்டம் செய்யும்.

போட்டிகளானது எதிர்வரும் ஜுலை மாதம் பிராம்ப்டனில் அமைந்துள்ள ஊயுயு கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

# மொன்ரியலில் விபத்தில் 80 வயதான மூதாட்டி பலி

கனடாவின் மொன்ரியல் நகரின் செயிண்ட் லியோனார்ட் பகுதியில், சனிக்கிழமை இரவு வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் தூணில் மோதி ஏற்பட்ட விபத்தில், 80 வயதான ஒரு மூதாட்டி ஒருவர் உயிரிழந்தார்.

மாலை 7:15 மணியளவில் லாகோர்டேர் புல்வது மற்றும் ஜாரி தெருவில் இடம்பெற்ற விபத்து குறித்து அவசர அழைப்பு ஒன்று பதிவு செய்யப்பட்டதாக மொன்ரியல் பொலிஸார் தெரிவித்துள்ளது.



பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்த போது, காரில் சலனமற்றிருந்த மூதாட்டியை வெளியே எடுத்து உயிர் காப்பு முதலுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த மூதாட்டி கடுமையான காயங்களுடன் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்தார், ஆனால் துரதிருஷ்டவசமாக அவர் இறந்துவிட்டார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த மூதாட்டி வடக்கு திசையில், லாகோர்டேர் புல்வதில்வேகமாக செல்கையில், திடீரென கார் கட்டுப்பாட்டை இழந்து, சாலையின் மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாயிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

விபத்துக்கான காரணங்கள் மற்றும் சூழ்நிலைகளைத் தெளிவுபடுத்த, பல்வேறு கோணங்களில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விபத்தில் மதுபானம் காரணமாக இருக்க வாய்ப்பில்லை என்றும் பொலிஸ் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த விபத்தில் வேறு எவரும் காயமடையவில்லை என்றும், சம்பவம் தொடர்பான விசாரணை தொடரும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

---

**மலையேறி...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

“காணாமல் போன மலைறேி உயிரிழந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்” என உறுதி செய்தனர்.

“மலையேறியின் குடும்பத்திற்கும் நண்பர்களுக்கும் எங்களது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்” என பொலிசார் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளனர்.

உயிரிழந்தவர் பற்றிய விபரங்கள் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

---

**கனடாவில்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதில் நேற்று இரவு காலிஸ்தானியர்களால் சேதப்படுத்தப்பட்ட சர்ரேயில் உள்ள லட்சுமி கோவிலுக்கு நான் சென்றேன்.

இது மூன்றாவது முறையாக சேதப்படுத்தப்பட்டுள்ளது. நிர்வாகத் திடமும் பக்தர்களிடம் தான் பேசி போது பொலிஸ் அல்லது அரசியல்வாதிகள் சிறிதும் கவலைப்படுவதாக உணரவில்லை என தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

# சில வகை பேஸ்ட்ரிகளை பயன்படுத்த வேண்டாம்

## கனேடிய உணவு பரிசோதனை நிறுவனம் எச்சரிக்கை

கனடாவில் சில வகை குளிரூட்டப்பட்ட பேஸ்ட்ரிகளை பயன்படுத்த வேண்டாம் என கனேடிய உணவு பரிசோதனை நிறுவனம் (CFIA) எச்சரிக்கை விடுத்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த பேஸ்ட்ரிகளில் சால்மொனெல்லா பக்டீரியா பாதிப்பு ஏற்பட்டிருக்கக்கூடியதாக சந்தேகிப்பதாகத் தெரிவித்துள்ளது.

இரு பண்டக்குறிகளைக் கொண்ட பதப்படுத்தி குளிரூட்டப்பட்ட பேஸ்ட்ரிகளை வாடிக்கையாளர்கள் பயன்படுத்துவதனை உடன் நிறுத்த வேண்டுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, Sweet Cream பிராண்ட் மற்றும் னு. நுகசந வு. பிராண்ட் ஆகிய இரண்டு வகை பேஸ்ட்ரிகளும் சந்தையிலிருந்து மீளப் பெறும் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

குறிப்பாக, அப்பல்லினி மிக்னான், மினி லோப்ஸ்டர் டெயில், அப்பல்லோ கே2, பிக் லொப்ஸ்டெர்டெயில், பொக்



லிடா நாபோலி, பிக் ஸ்ஃபோக்லியா நாபோலி, மினி ஸ்ஃபோக்லியாடெல்லா மற்றும் மினி பொக்லிடெல்லா சியா சொலெட்டா ஆகிய பேஸ்ட்ரி வகைகளே இவ்வாறு பக்டீரியா தொற்றுக்குள்ளாகியுள்ளன.

இந்நிலையில், அல்பெர்டா, மானிடோபா, நோவா ஸ்கோஷியா, ஒன்டாரியோ மற்றும் கியூபெக் ஆகிய மாகாணங்களில் இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், மற்ற மாகாணங்களிலும் இவ்விதமான தயாரிப்புகள் விநியோகமாகியிருக்கக்கூடும் என்பதால், மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த தயாரிப்புகள் சில நேரங்களில் அடையாளம் இல்லாமல், பணியாளரால் வழங்கப்படும் பேக்கேஜ்களிலும் அல்லது பிராண்ட் பெயர் மற்றும் தயாரிப்பு பெயர் இல்லாமல் விற்பனை செய்யப்பட்டிருக்கக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சால்மொனெல்லா பாக்டீரியாவால் பாதிக்கப்பட்ட உணவுகள் பொதுவாக வாசனையிலோ தோற்றத்திலோ மாற்றம் தெரியாமல் இருந்தாலும், அதை உண்ணும் போது உயிருக்கு ஆபத்தாக மாற வாய்ப்புள்ளது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனால், சிறிய பிள்ளைகள், கர்ப்பிணிகள், முதியவர்கள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள் அதிக பாதிப்புக்குட்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற உணவுகள் சம்பந்தப்பட்ட தயாரிப்புகளை உடனே பயன்படுத்துவதை நிறுத்தி, விற்பனையாளரிடம் திருப்பிச் செலுத்துமாறு கனடா உணவு பரிசோதனை நிறுவனம் வலியுறுத்தியுள்ளது.



# 5 லட்சம் இந்தியர்கள் பங்கேற்ற பிரமாண்ட நிகழ்வு கனடாவில்

கனடாவில் நடைபெற்ற இந்தியர்களின் பிரமாண்ட நிகழ்வு ஒன்றில் சுமார் ஐந்தரை லட்சம் பேர் பங்கேற்றனர் என தெரிவிக்கப்படகின்றது.

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள சர்ரே நகரில் 2025 ஆம் ஆண்டு வைசாகி தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கல்சா நாள் ஊர்வலத்தில் இவ்வாறு 5,50,000 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகின் மிகப்பெரிய சீக்கிய சமூகத்தினரின் வைசாகி விழாவாக இது மீண்டும் மாறியுள்ளது.

சர்ரே நகரின் 128 ஆவது வீதியில் அமைந்த குருத்வாரா டாஷ்மேஷ் தர்பார் கோவிலில் இருந்து ஆரம்பித்த ஊர்வலத்தில், இருபதிற்கும் மேற்பட்ட அலங்கரிக்கப்பட்ட வாகனங்கள் பங்கேற்றன.

“இன்றைய நிகழ்வில் நாம் கண்டது, ஒற்றுமை, பல்வகை தன்மை மற்றும் பொது மகிழ்ச்சி ஆகியவற்றின் அழகான வெளிப்பாடு” என்று ஊர்வல பேச்சாளர் மோனிந்தர் சிங் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார்.

“சர்ரே நகர் கீர்த்தன் என்பது, சீக்கிய சமூகத்தின் வரலாறு, பழக்கவழக்கங்கள், மனித உரிமைகளுக்கான உறுதி மற்றும் அரசியல் சுயாதீனத்திற்கான நம்பிக்கையை பகிரும் வாய்ப்பாகும்.

இது, சர்ரி மற்றும் கனடாவில் வாழும் அனைத்து மக்களுடனும் உறவுகளை இணைக்கும் நிகழ்வாகவும் உருவாகி வருகிறது.

இந்த பாரம்பரியம் தொடர்ந்து வளரும் விதமாக காண்பது மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது” என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வைசாகி, 1699ஆம் ஆண்டு கல்சாவின் உருவாக்கத்தையும், பஞ்சாபில் விவசாயிகளின் விளைச்சலையும் நினைவுபடுத்தும் வகையில் இந்த ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டது.